REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 2 புதன்கிழமை
தினகரன்
THINAKARAN
தினகரன்




வரு. 88 இல. 286 | December 02,Wednesday, 2020 | 28பக்கங்கள் | 30/-

# தேசிய நல்லிணக்கத்தின் ஊடாக பிரச்சினைகளை அணுகும் டக்ளஸ்

## அமைச்சர் டக்ளஸின் முயற்சிக்கு அமெரிக்க துாதுவர் பாராட்டு



தேசிய நல்லிணக்கம் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கு அமெரிக்கா பூரண ஒத்துழைப்பை வழங்குமென்றும் கடற்றொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாகவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் (Alaina B. Teplitz) அலெய்னா பி ரெப்லிட்ஸ் உறுதியளித்துள்ளார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று (01) மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

காலநிலை மாற்றத்திற்கேற்ப உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கை அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இந் நிலையில், இந்த அபிவிருத்தி திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய

06



நாட்பட்ட நோயாளர்கள்

### சமூகத்திற்குள் செல்வதை தவிர்க்குமாறு ஆலோசனை

03



### பொறுப்புடன் செயற்படின் கொரோனாவை விரட்டலாம்

டொக்டர் பாலித்த கருணா பேம கருத்து

03



மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பிரபாகரன் குமாரட்ணம் நேற்று (01) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து சத்தியபிரமாணம் செய்து கொண்ட பின்னர் நியமனப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டபோது பிடிக்கப்பட்ட படம்.

# வங்காள விரிகுடா... சூறாவளியாக ம...

இன்று இரவு மட்டக்களப்பு – பருத்தித்து...



லோரன்ஸ் செல்வநாயகம்

✸ 100 கி.மீ வேகத்தில் காற்று வீசும்
✸ மீனவர்களுக்கு கடும் எச்சரிக்கை

வங்கக்கடலில் நிலை கொண்டிருக்கும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளதுடன் அடுத்த 12 மணி நேரத்தில் கடும் புயலாக மாறும் வாய்ப்புள்ளதாக வானிலை அவதான நிலையம் தெரிவிக்கிறது.

இப் புயல் சின்னம் திருகோணமலையிலிருந்து வடகிழக்கு திசையில் நேற்று (01) மாலை 500 கிலோ மீட்டர் தூரத்தில் நிலை கொண்டிருந்ததாகவும் இன்று இரண்டாம் திகதி மாலை அல்லது இரவு மட்டக்களப்புக்கும் பருத்தித்துறைக்குமிடையே கரையைக் கடக்குமென்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் 12 மணி நேரத்தில் கடும் புயலாக மேலும் வலுவடையும் வாய்ப்பு

06

இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக

# வீடியோ தொழில் நுட்பத்தில் அமைச்சரவைக் கூட்டம்



## ஜனாதிபதி, பிரதமர் பங்கேற்பு

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக, ஜனாதிபதி, பிரதமர் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டம் (30) வீடியோ தொழில்நுட்பத்தின் மூலம் நடைபெற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, விஜேராம மாவத்தையிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ

06

கொரோனா வைரஸினால் இறந்தோர்

# சடலங்களை எரிப்பதற்கு எதிரான மனுக்கள் நிராகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை தகனம் செய்வதற்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல்

06



# O/L பரீட்சையை திட்டமிட்ட திகதியில் நடத்த முடியாது

## பாராளுமன்றில் கல்வியமைச்சர் G.L. அறிவிப்பு

சம்ஷ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்

நாட்டில் நிலவும் கொவிட் நெருக்கடி காரணமாக க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைகள் உரிய தினத்தில் நடாத்த முடியாதென்பதால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கான புதிய திகதியை அறிவிப்பதற்கு முன்னர் ஆறு வாரகாலம் மாணவர்களுக்கு ஆயத்தமாக அவகாசம் அளிக்கப்படுமென கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்

06

# நாடு முழுவதும் வைரஸ் தொற்று பிரதேசமாக அரசு பிரகடனம்

மக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது அவசியம்

லோரன்ஸ் செல்வநாயகம்



அஜித் ரோஹன

நாடு முழுவதும் வைரஸ் தொற்று பிரதேசமாக பெயரிடப்பட்டுள்ள நிலையில் நாட்டில் அனைத்து மக்களும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவது கண்டிப்பானதாகும் என பிரதிப் பொலிஸ் மா அதிபர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். சுகாதார வழிமுறைகளை பின்பற்றாதவர்கள்

06

# கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளுக்கு விடுமுறை

சீரற்ற காலநிலையால் ஆளுநர் எடுத்த தீர்மானம்



சீரற்ற காலநிலைக் காரணமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் டிசம்பர் 02, 03 மற்றும் 04 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக

06

மஹர சிறைச்சாலை சம்பவ விசாரணைக்கு

# ஐவரடங்கிய உயர்மட்டக் குழு நீதியமைச்சரால் நியமனம்



‘ஆயுதங்களை கையளிக்க அவகாசம்’

# பாதாள குழுக்களுக்கு சரத் வீரசேகர காலக்கெடு

# பாராளுமன்ற பணியாளர் எவருக்கும் தொற்றில்லை

செயலாளர் நாயகம் தம்மிக்க தெரிவிப்பு

# வாகன இலக்கத் தகடு, சாரதி அனுமதி பத்திரம்

Speed Post இல் அனுப்பப்படும்